சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – வன்கொடுமை தடுப்பு – தருமபுரி மாவட்டம் நத்தம் கிராமத்தில் 07.11.2012 அன்று தலித் மக்களின் வீடுகளை சேதப்படுத்தியது – 99 புதிய வீடுகள் கட்ட ரூ. 2,67,30,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடுதடு1) துறை

அரசு ஆணை (நிலை) எண்:7 நாள்: 22. 01.2013

தை 9 திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது

1. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண் 27961/2012/ கொ3, நாள் 03.12.2012.

2. அரசாணை (நிலை) எண்.124, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 10.12.2012.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட, தருமபுரி மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் தருமபுரி மாவட்டம் வெள்ளாளப்பட்டி ஊராட்சி நத்தம் குடியிருப்பு, ஆண்டி அள்ளி, அண்ணாநகர் மற்றும் கொண்டம்பட்டி கிராமங்களில் 07.11.2012 அன்று ஆதி திராவிடர் மக்களின் வீடுகளை தீவைத்து உடமைகளை சேதப்படுத்தியதில் கூடுதலாக சேதமடைந்த 99 வீடுகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.2,67,30,000/– (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்திஏழு இலட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) அனுமதித்து ஆணை வழங்குமாறு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தருமபுரி மாவட்டம் வெள்ளாளப்பட்டி ஊராட்சி நத்தம் குடியிருப்பு, ஆண்டி அள்ளி, அண்ணாநகர் மற்றும் கொண்டம்பட்டி, செங்கல்மேடு ஆகிய கிராமங்களுக்கு முதற் கட்ட நிவாரணமாக ரூ.1,63,43,550/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலித்து தருமபுரி மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று 07.11.2012 அன்று வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மக்களுக்கு கூடுதலாக 99 வீடுகள் கட்ட தேவைப்படும் ரூ.2,67,30,000/– (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் – 01 – மறு வாழ்வு – 200 – ஏனைய துயர் தணிப்பு நடவடிக்கைகள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – VI – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UA – கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு நிதி உதவி – 51 – இழப்பீடு –02 – ஏனைய இழப்பீடுகள். (த.தொ.கு.2235 01 200 UA 5129)

5. இது ஒரு 'புதுத் துணைப்பணி' குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர் பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணைகள் நிதி (வ.செ.பொது–1) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு தேவையான விண்ணப்பித்தினை உரிய படிவத்தில் நிதி (வ.செ.பொது–1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். துணை மானிய கோரிக்கையில் சேர்ப்பதற்கான முன்மொழிவுகளை நிதி (ஆதி(ம)ப.ந)துறைக்கு அனுப்பும்போது இதனையும் சேர்த்து அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை, தமது அறிக்கையில் கண்டவாறு செலவினத்தை மேற்கொள்ளுமாறும் அது தொடர்பான அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.09/DS(VS)/13, நாள் 21. 01. 2013 இசைவுடனும் மற்றும் நிதி (வ. செ –II ) துறையின் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2168 (இரண்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு) ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது

// ஆளுநரின் ஆணைப்படி//

**தங்க கலியபெருமாள்,**
அரசுச் செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5
மாவட்ட ஆட்சித்தலைவர், தருமபுரி மாவட்டம், தருமபுரி
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை
மாவட்டக் கருவூல அலுவலர், தருமபுரி மாவட்டம்.
தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/6/35
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9

நகல்:-
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–9
நிதித்( ஆதி(ம) ந.ப.) / வசெபொது–1/ வசெ பொது–2)துறை, சென்னை–9
உள்துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
இருப்பு கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.